OS 58/2020
பி.வா.சா.1 பூபதி த/பெ பொன்னுசாமி
நாள் 25.06.2025

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. நீலகண்டன் வழக்கு போடுவதற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ7 அஞ்சல் ஒப்புதல் அட்டையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு நான் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை தான் அது என்றால் சரிதான். அந்த அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. பதில் அறிவிப்பு கொடுக்க வழக்கறிஞரை பார்த்தேனா என்றால் நியாபகம் இல்லை. நாங்கள் வழக்கறிஞர் திருஞானம் என்பவர் மூலம் பதில் அறிவிப்பு அனுப்பியிருக்கிறோம் என்றாலும் அது வா.சா.ஆ13 ஆக வாதி தரப்பில் தாக்கல் செய்திருக்கிறார் என்றாலும் சரியல்ல. பதில் அறிவிப்பில் மூதாதையர் சொத்துகள் விற்பனை செய்து தான் என் மகள்களுக்கு திருமணம் செய்துவைத்ததாக விவரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 1 மகளுக்கு திருமணம் ஆகவில்லை. எனது மகள்களுக்கு திருமணம் செய்யப்பட்ட திருமண அழைப்பிதழை தாக்கல் செய்ய முடியுமா என்றால் தெரியாது. பூர்வீக சொத்து விற்பனை செய்து சுமதிக்கு திருமணம் செய்ததாக சொல்வது பொய் என்றாலும் சொத்து விற்பனை செய்வதற்கு முன்பே சுமதிக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் சரியல்ல. எனது தரப்பில் எதிர்வழக்குரையில் நான் திருவல்லிக்கேணியில் வாதி தனியார் மருத்துவமனை சிகிச்சை பெற்றார் என்ற விவரம் கூறவில்லை என்றால் சொல்லி இருப்பார்கள் கவனம் இல்லை. நாங்கள் தான் சொன்னேன். வழக்கு சொத்துகள் கூட்டு குடும்ப சொத்துகள் என்றால் இல்லை நான் வாங்கிய சொத்து ஆகும். வாதி 23 வருடங்கள் தனியாக இருப்பதால் வழக்கு சொத்தில் பாகம் இல்லை என்று சொல்லமுடியாது என்றால் சரியல்ல. கூட்டு குடும்ப சொத்தை நான் இளங்கோவிற்கு எழுதி கொடுத்ததும் இளங்கோ தட்சிணாமூர்த்திக்கு எழுதி கொடுத்ததும் செல்லாது என்றால் சரியல்ல. தட்சிணாமூர்த்தி ஆக்சிஸ் வங்கியில் வழக்கு சொத்துகள் பெயரில் கடன் வாங்கியது வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு அனுமதிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>4 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வழக்கு சொத்துகளை நான் ஆதிமூலத்திடம் இருந்து கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். நான் வாங்கிய சொத்தை எனது குடும்ப செலவிற்காக 4ம் பிரதிவாதி இளங்கோவிற்கு விற்பனை செய்தேன் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி வழக்கு சொத்துகளை தனது பெயரில் பட்டா மாற்றம் செய்து பின்னர் 5ம் பிரதிவாதி தட்சிணாமூர்த்திக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் சரிதான். நான் இளங்கோவிற்கு சொத்து விற்பனை செய்த விவரம் எனது மகன் நீலகண்டனுக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்துகளை எனக்கும் எனது மகன் நீலகண்டனுக்கும் உரிமை இல்லை என்றாலும் 5ம் பிரதிவாதியின் நிலத்தை அபகரிக்க வேண்டி எனது மகன் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரிதான்.